புதிய தலைமுறை அறக்கட்டளை

இளைஞர் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும்
ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வதொண்டு நிறுவனங்களில் ஒன்று
(An ISO 9001: 2015 Certified NGO)

**ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்**

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்
(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

ISRB/SEMINAR/15

*A Report on*

# ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் - விவசாயப்பொருட்கள் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் சார்ந்த கருத்தரங்கம்

# *Seminar on Export Business Opportunities- Agro based & Value added Food Products*

**செப்டம்பர் 29, 2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி**

**இடம்: தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்க வளாகம், கிண்டி சென்னை**



கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் வி.கே. கிரீஷ் பாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி



பயிற்சியாளர் டாக்டர். கே.எஸ். கமாலுதீன். நிர்வாக இயக்குநர், Blue Bharath Exim Pvt. Ltd. சென்னை அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி



அறக்கட்டளையின் மூத்த ஆலோசகர் வி.சந்திரசேகரன் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி



பயிற்சியாளர் கே.எஸ். கமாலுதீன் அவர்கள் Stall (அரங்கத்தை) பார்வையிட்ட காட்சி





கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

புதிய தலைமுறை அறக்கட்டளையின், பொதுமேலாளர் - திட்டங்கள் ச.சுரேஷ் கண்ணன், வரவேற்புரையாற்றிய காட்சி

விவசாயத்தை முதன்மைபடுத்தும் விதமாக வேளாண்மைவிளை பொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதிசெய்து இந்தியநாட்டின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி.எக்ஸ்போ மன்றம் சார்பில் செப்டம்பர் 29, 2024 அன்று சென்னை கிண்டியில் உள்ள தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்க வளாகத்தில் ஏற்றுமதி தொழில்வாய்ப்புகள் – விவசாயப்பொருட்கள் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் சார்ந்த கருத்தரங்கம் நடைபெற்றது.

காலை 10.00 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கருத்தரங்கம் தொடங்கியது. புதிய தலைமுறை அறக்கட்டளையின் பொது மேலாளர் திட்டங்கள் சுரேஷ்கண்ணன் தனது வரவேற்புரையில் அறக்கட்டளையின் திட்டங்கள், கடந்த ஆண்டு நடத்திய ஏற்றுமதி கருத்தரங்கங்கள் மற்றும் அறக்கட்டளயின் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

அறக்கட்டளையின் ஆலோசகர் வி.சந்திரசேகரன் பேசுகையில் ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்து பேசுகையில் தயாரிப்பு குறித்த தகவல்கள், பணத்தின் முக்கியத்துவம், தாங்கள் செய்ய விரும்பும் தொழில் குறித்து முழுமையான தகவல்களை சேகரித்து பின்னர் தொழிலை தொடங்க வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர் பயிற்சியாளர் கமாலுதீன் அவர்கள் தன்னைப்பற்றியும் தன்நிறுவனம் குறித்தும் தான் ஏற்றுமதிதுறையில் 26 ஆண்டுகாலம் பெற்ற அனுபவம், இதுவரை 1000க்கும் அதிகமானமாணவர்களுக்கு ஏற்றுமதிதொழில் குறித்து தனது நிறுவனத்தின் மூலம் பயிற்சி வழங்கியுள்ளேன் என்றும், இந்த கோவிட் பெருந்தோற்று காலத்தில் பலதொழில்கள் பின்னடைவை சந்தித்தாலும் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மட்டும் நிலையாக நடைபெற்றது என்று

“நான் இங்கே ஒருபயிற்சியாளராக வரவில்லை என் தொழிலில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட தோல்விகளில் இருந்து நான் எப்படி மீண்டு எனது தொழிலில் வெற்றிபெற்றேன் என்றும் எனது அனுபவங்களை இங்கே உங்களுக்கு எடுத்துரைத்து ஒருவெற்றிகரமான ஏற்றுமதியாளராக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்கு வழிகாட்டவே இங்கே வந்திருக்கிறேன்”

தேநீர் இடைவேளைக்கு பின் பயிற்சியாளர் பேசுகையில், ஏற்றுமதி தொழில்துவங்குவதற்கு 5 நிலைகள் உள்ளன என்றும் அவைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

1. தொடக்கநிலை (Start-up)

2. முன்திட்டமிடல் (Pre-Planning)

3. முன்னேற்றும் மற்றும் செயல்முறை (Progress & Process)

4. ஏற்றுமதி செய்யும் முறைகள் மற்றும் போக்குவரத்து (Shipping & Logistics)

5. மேலாண்மை செயல்முறை (Management Process)

மேலும் பேசுகையில் நான் இங்கே ஒருபயிற்சியாளராக வரவில்லை என் தொழிலில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட தோல்விகளில் இருந்துதான் எப்படி மீண்டு எனது

அனுபவங்களை இங்கே உங்களுக்கு எடுத்துரைத்து ஒருவெற்றிகரமான ஏற்றுமதியாளராக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்கு வழிகாட்டவே இங்கே வந்திருக்கிறேன் என்றும் ஏற்றுமதி தொழிலில் ஈடுபடும் பொழுது மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டும் என்றும் நிறையை தகவல்களை எடுத்துரைத்தார்.

ஏற்றுமதி தொழில் தொடங்க வேண்டும் என்றால் முதலில் கீழ் கண்ட விசயங்களில் தெளிவு பெறவேண்டும். என்ன பொருளை ஏற்றுமதி செய்யப்போகிறீர்கள், அந்த பொருளுக்கு எந்த நாட்டில் தேவை அதிகம் இருக்கிறது என்பதை அறிந்து தொழிலை தொடங்க வேண்டும். இந்தியாவில் பெரும்பாலும் வேளாண்மை விளைபொருட்களே அதிகம் ஏற்றுமதியாகின்றன என்றும் கூறினார்.

மேலும் பேசுகையில் சர்வதேச சந்தையில் தனது அனுபவகங்கள்தான் சந்தித்த சவால்கள், நாடுகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் ஒருபொருளுக்கான HS Code ஐ கண்டுபிடிக்கும் வழிமுறைகள் மற்றும் ஏற்றுமதிக்கும் உதவும்வலைதளங்கள் (https://commerce.gov.in,https://www.indiantradeportal.in) அவற்றில் தகவல்களை எப்படி தெரிந்துகொள்வது என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் ஏற்றுமதி தொழிலுக்கு உதவும் பல் வேறுநிறுவனங்கள் FIEO, APEDA, Spices Board, IIMM, MMA, அவற்றின் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஏற்றுமதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்கள் குறித்ததகவல்கள், அனுமதிக்கப்பட்ட பொருட்கள், பொருள்களை தேர்வுசெய்யும் முறைகள், நாடுகளை கண்டறியும் வழிமுறைகள், இறக்குமதியாளரை (Buyer) அடையாளம் காணும்வழிமுறைகள், ஆர்டர் எடுக்கும் வழிமுறைகள் மற்றும் Shipment Process குறித்ததகவல்களையும், தான் உருவாக்கிய BAccuracy என்ற மென்பொருள் வாயிலாக நேரடியாக பயிற்சிஅளித்தார். அதில் Invoice List, Packing List, Order Request போன்ற பல்வேறு அம்சங்களை தயார் செய்யும் முறைகளை ஆன்லைன் வாயிலாக விளக்கி கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். பிரசன்னா, சமூக வலைதள நிபுணர், Proven Web Digital Soultions, Chennai அவர்கள் பேசுகையில் சமூக வலைதளங்கள் மூலமாக தாங்கள் செய்து வரும் தொழிலை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் வாடிக்கையாளர்களை கவரும் முறைகள், வலைதளங்களில் விளம்பரம் செய்யும் முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.



எஸ். பிரசன்னா அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

இக்கருத்தரங்கில் 9க்கும் மேற்பட்ட சிறுதொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்களை (பருப்பு வகைகள், மரவள்ளி கிழங்கு மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் (ஜவ்வரிசி, மரவள்ளி கிழங்கு பொடி), தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணெய், உணவுப்பொருட்கள் பேக்கிங் பாக்ஸ், பெண்களுக்கான நைட்டீஸ் வகைகள், வலி நிவாரணி தைலைம், நாப்கின்கள், ஹெர்பல் பல்பொடி, வெட்டிவேர் மாலை, வெட்டிவேர் மதிப்புக்கூட்டுப்பொருட்கள்) STALL மூலம் காட்சிபடுத்தியிருந்தனர். பார்வையாளர்கள் ஆர்வமுடன் அவற்றறை பார்வையிட்டு தொழில் முனைவோர்களிடம் கலந்துரையாடினர்.





இறுதியாக வினாடி வினா போட்டி நடத்தப்பட்டு சரியான பதில் கூறிவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.
இக்கருத்தரங்கில் புதுச்சேரி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, தர்மபுரி, சேலம், சிவகங்கை, நாமக்கல், தென்காசி, திருவண்ணாமலை உட்பட 15க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து (சிறுதொழில்முனைவோர், விவசாயிகள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், கல்லூரிபேராசிரியர்கள், கல்லூரிமாணவர்கள், பெண்கள், மற்றும் ஓய்வு பெற்ற வங்கித்துறை & அரசுத்துறைப் பணியாளர்கள்) உட்பட 90க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் - விவசாயப்பொருட்கள் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் சார்ந்த கருத்தரங்கம்

## கருத்தரங்கத்தின் சில புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு













*ISRB Expo Forum (A Unit of Puthiya Thalaimurai Foundation)*
*No: 24, G.N. Chetty Road, T.Nagar, Chennai - 600 017 | Email: info@isrbexpo.org*
*Mobile: 8754417500, 9944544299, 8754417400, | www.isrbexpo.org*